


15.02.2025

**தலைப்பு செய்திகள்**

**1.** செயற்கை நுண்ணறிவை உயர் கல்வியுடன் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. புதுதில்லியில் நடைபெறும் சர்வதேச வர்த்தக உச்சிமாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று உரையாற்றுகிறார்.

**3.** காசி தமிழ் சங்கமம் தேச ஒற்றுமையை வெளிப்படுத்துவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

**4.** பிரதமரின் கிராமசாலை திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

**5.** ஹாங்காங்கில் நடைபெறும் ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் அரையிறுதி ஆட்டங்களில் இந்தியா இன்று களமிறங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

**ழூழூழூழூழூழூழூழூழூ**

**திரௌபதி முர்மு**

செயற்கை நுண்ணறிவை உயர் கல்வியுடன் ஒருங்கிணைக்க மத்திய அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ராஞ்சி மெஸ்ரா பிர்லா தொழில்நுட்ப கல்வி கழகத்தின் பவள விழா நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர் செயற்கை நுண்ணறிவால் எதிர்காலத்தில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்படும் என்று குறிப்பிட்டார்.

அறிவுசார் கட்டமைப்பில் பாரம்பரிய சமூகத்தினரின் பங்களிப்பை தொழில்முனைவோரும் படைப்பாற்றல் திறனாளர்களும் புறக்கணிக்க கூடாது என்றும் அவர் அறிவுறுத்தினார்.

மகளிர் ஆளுமை குறித்து பெருமிதம் தெரிவித்த அவர் அறிவியல், பொறியியல், தொழில்நுட்பம், கணித துறைகளில் மகளிரின் அளப்பரிய பங்கை பாராட்டினார்.

தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்களும், வாய்ப்புகளும் அனைவருக்கும் கிடைக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் பிர்லா கல்வி நிறுவனத்தின் பங்களிப்பை பாராட்டிய அவர் ஆராய்ச்சி படைப்பாற்றல் பிரிவுகளில் மேலும் பல சாதனைகளை இந்நிறுவனம் படைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**ழூழூழூழூழூழூழூழூழூ**

**பிரதமர்**

புதுதில்லியில் நடைபெறும் சர்வதேச வர்த்தக உச்சிமாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று உரையாற்றுகிறார்.

தனியார் துறை சார்பிலான இந்த உச்சி மாநாட்டில் வர்த்தகம் சார்ந்த முதலீடுகளுக்கு பிரதமர் அழைப்பு விடுக்க உள்ளார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துரைக்கும் அவர், உற்பத்தி பெருக்கம், தற்சார்பு நிலை, தொழில்நுட்ப வளர்ச்சி, மின்னணு புரட்சி போன்றவை குறித்தும் விரிவாக உரையாற்றுகிறார்.

**ழுழுழுழுழுழுழுழுழு**

**பரிக்ஷா பே சர்ச்சா - சத்குரு**

இளையோரின் வளர்ச்சியில் கல்வி மட்டுமல்லாமல் மன நலம் முக்கிய பங்காற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடியின் நம்பிக்கையை சத்குரு ஜக்கி வாசுதேவ் எடுத்துரைத்தார்.

பரிக்ஷா பே சர்ச்சா கலந்துரையாடலின் 5ஆவது பதிப்பில், மாணாக்கருக்கு மன ஆலோசனைகளை வழங்கிய அவர், விழிப்புடனும், எழுச்சியுடனும் தெளிவான சிந்தனையோடு முன்னேற்ற பாதையில் மாணாக்கர் வலுவுடன் செல்ல முடியும் என்று கூறியுள்ளார்.

இளைஞர்கள் தங்கள் மனதை சமச்சீருடன் வைத்துக்கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்கிய அவர் தேர்வுகளை கவனத்துடனும், விழிப்புடனும் எதிர்கொள்வதற்கான தொழில்நுட்ப அறிவுரைகளையும் வழங்கினார்.

மாணாக்கர் அறிவாற்றலை ஆக்கப்பூர்வமாக முன்னெடுத்து செல்ல வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

**வாய்ஸ்**

**ழுழுழுழுழுழுழுழுழு**

**பிரதமர் மன் கீ பாத்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன்-கீ-பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 119-வது முறையாக வரும் 23ஆம் தேதி காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசைகளிலும் இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பாகும்.

தொடர்ந்து காலை 11.30 மணிக்கும் இரவு 8 மணிக்கும் இதன் மொழியாக்கம் இடம்பெறும்.

இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய தங்கள் கருத்துக்களை பொதுமக்கள் வரும் 21ஆம் தேதிவரை அலபழஎ இணையதளம், நமோ செயலி 1800 11 7800 என்ற எண்ணில் தெரிவிக்கலாம்.

**ழுழுழுழுழுழுழுழுழு**

**மீன் உற்பத்தி**

நாட்டின் மீன் உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளில் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது.

இதன்படி 2013-14ஆம் நிதியாண்டில் 95 லட்சம் டன்னாக இருந்த மீன் உற்பத்தி 2023-24 நிதியாண்டில் ஒரு லட்சத்து 84 ஆயிரம் டன்னாக அதிகரித்துள்ளது.

உலக அளவில் 8 சதவிகித பங்களிப்புடன் இரண்டாவது மிகப்பெரிய மீன் உற்பத்தி நாடாக இந்தியா திகழ்கிறது என்று மீன்வளத்துறை அறிவித்துள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் இந்திய மீன்வளத்துறை மாபெரும் வளர்ச்சியுடன் கூடிய மாற்றங்களை சந்தித்து வருவதாகவும் அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இதுவரை இல்லாத அளவாக மீன்வளத்துறைக்கு 2 ஆயிரத்து 703 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சகம் எடுத்துரைத்தது.

ழுழுழுழுழுழுழுழுழு

**வருமான வரி**

புதிய வருமான வரி சட்ட மசோதா குறித்து ஆராய 31 உறுப்பினர் கொண்ட தேர்வு குழுவை மக்களவை தலைவர் திரு.ஓம்.பிர்லா ஏற்படுத்தியுள்ளார்.

பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் **பைஜெயந்த் பாண்டா** தலைமையிலான இக்குழு தனது அறிக்கையை இரண்டாவது கட்ட பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாளில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளது.

வருமான வரி சட்ட திருத்தங்களுடனான இப்புதிய மசோதாவை கடந்த வியாழக்கிழமை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மக்களவையில் தாக்கல் செய்தார்.

இம்மசோதாவை தேர்வு குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப நிதியமைச்சர் பரிந்துரைத்ததன் அடிப்படையில் மக்களவை தலைவர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழு

**எல்.முருகன் காசி தமிழ் சங்கமம்**

உத்திரபிரதேச மாநிலம் வாரணாசியில் 3ஆவது காசி தமிழ் சங்கமம் நிகழ்வை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன், கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திரபிரதானுடன் இணைந்து இன்றுமாலை துவக்கிவைக்கிறார்.

வரும் 24ஆம் தேதிவரை நடைபெறும் காசி தமிழ் சங்கமத்தில் காசி - தமிழகம் இடையிலான தொன்மையான, பாரம்பரிய, கலாச்சாரா தொடர்புகளின் கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்றன.

மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற உயரிய கருப்பொருளுடன் நடைபெறும் இந்நிகழ்ச்சி தேச ஒற்றுமையை வெளிப்படுத்துவதாக கூறியுள்ளார்.

தமிழகம் காசி இடையேயான நூற்றாண்டுகால கலாச்சார உறவினை மேம்படுத்தும் வகையில் 3ஆது ஆண்டாக இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற வகை செய்த பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு தமிழக மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்வதாக கூறினார்.

தமிழகத்திலிருந்து ஆயிரம் பிரதிநிதிகள் பங்கேற்கும் இந்நிகழ்ச்சியில் இளைஞர்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழு

**அந்நிய செலாவணி**

நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு கடந்த 7ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 638.26 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து 3ஆவது வாரமாக நாட்டின் அந்நிய செலாவணி ஏறுமுகமாக காணப்படுகிறது.

இதே காலத்தில் தங்க கையிருப்புகளும் 72.20 டாலராக அதிகரித்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழு

**முதலமைச்சர்**

பிரதமரின் கிராமசாலை திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் மாநில, வளர்ச்சி ஒருங்கிணைப்பு கண்காணிப்பு குழு கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர் பிரதமரின் ஊரக குடியிருப்பு திட்டத்தின் கீழ், வீடுகளுக்கான அலகு தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

அங்கன்வாடி கழிப்பறைகளுக்கான மதிப்பீட்டு தொகை 50 ஆயிரம் ரூபாயிலிருந்து, 75 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

தென்னை விவசாயிகளுக்கு விரைவில் பணப்பட்டுவாடா செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் மத்திய அரசு 2 ஆயிரத்து 118 கோடி ரூபாய் நிலுவை வைத்துள்ளதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

**ழுழுழுழுழுழுழுழுழு**

**ஊடீளுநு தேர்வு**

ஊடீளுநு 10 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் இன்று தொடங்கின.

10ஆம் வகுப்பு தேர்வுகள் அடுத்த மாதம் 10-ம் தேதிவரையிலும்,

12ஆம் வகுப்பு தேர்வுகள் ஏப்ரல் 4ஆம் தேதியும் நடைபெற உள்ளன.

நம்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் 42 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் தேர்வு எழுதும் நிலையில் இவர்களுக்காக 7 ஆயிரத்து 842 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**ழுழுழுழுழுழுழுழுழு**

**ரகுபதி**

புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சி திட்ட முகமை அலுவலகத்தில் 10 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய கட்டிட பணிகளுக்கு மாநில சட்ட அமைச்சர் திரு.ரகுபதி இன்று அடிக்கல் நாட்டினார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த அவர் ஈரோடு இடைத்தேர்தலில் அஇஅதிமுகவின் வாக்குகள் திமுகவிற்கு கிடைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடமைகள் முறையாக தமிழகத்திற்கு வந்தபின்னர் அவை பாதுகாப்பாக வைக்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

**ழுழுழுழுழுழுழுழுழு**

**தேசிய குடற்புழு**

விழுப்புரம் மாவட்டத்தில் தேசிய குடற்புழு நீக்க திட்டத்தின் கீழ் விடுபட்டவர்களுக்கான சிறப்பு முகாம் வரும் 17ஆம் தேதி நடைபெற உள்ளது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**ழுழுழுழுழுழுழுழுழு**

**புதுக்கோட்டை - கல்வி உதவிதொகை**

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பு கல்வியாண்டில் கல்வி உதவிதொகை பெற விரும்பும் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர் மரபின மாணாக்கர் வரும் 28ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**ழுழுழுழுழுழுழுழுழு**

**இருவரி**

**பெண்களின் நிதிபாதுகாப்பை உறுதிசெய்யும்** மகிளா சம்மான் சேமிப்பு திட்டம் வரும் மார்ச் 31ஆம் தேதியுடன் முடிவடைவதால் இதில் இணைந்து பயன்பெறுமாறு அரக்கோணம் அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் திரு.குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் மினி பேருந்து** சேவை தொடங்கப்பட உள்ளதால் விருப்பமுடையோர் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் மீண்டும் மஞ்சள்** பை இயக்கத்தை சிறப்பாக முன்னெடுத்து செல்லும் கல்வி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மாநில அரசின் விருதுபெற விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**கள்ளக்குறிச்சி மாவட்டம் ரங்கநாதபுரத்தில் ஒரு** கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பில் சமுதாயக் கூடம் அமைக்கும் பணிகள் நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

**அரியலூர் மாவட்டம் தத்தனூர் மீனாட்சி** ராமசாமி கலை அறிவியல் கல்லூரியில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று நடைபெறுகிறது.

2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலிபணியிடங்கள் நிரப்பப்பட உள்ளதால் இளைஞர்கள் இவ்வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

**உலக அமைதி மற்றும் அகிம்சையை** வலியுறுத்தி வெளிநாட்டினர் கலந்து கொண்ட அமைதிப் பேரணி ஸ்ரீவில்லிப்புத்தூரில் இன்று நடைபெற்றது.

**காஞ்சிபுரம் சிலம்பம் பயிற்சி மையம் சார்பில் நாளை நடைபெறும்** உலக சாதனை நிகழ்வில் மண் பாண்டங்களின் மீது நின்று 3 மணி நேர சிலம்பம் சுற்றும் சாதனைகள் இடம்பெற உள்ளன.

இதில் வெற்றிபெறுபவர்களுக்கு மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் பரிசுகளை வழங்க உள்ளார்.

**வாரவிடுமுறையை ஒட்டி திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல்** மோயர் சதுக்கம் உள்ளிட்ட சுற்றுலா தலங்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி** திருக்கோவில் தைபூச திருவிழா உண்டியல் காணிக்கையாக 3 கோடியே 31 லட்சம் ரூபாய் பெறப்பட்டதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**ழூழூழூழூழூழூழூழூ**

**ஸ்குவாஷ்**

ஹாங்காங்கில் நடைபெறும் ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் அரையிறுதி ஆட்டங்களில் இன்று இந்தியா:

ஆடவர் பிரிவில் - மலேசியாவையும்,

மகளிர் பிரிவில் ஹாங்காங்கையும் எதிர்கொள்கிறது.

**ழூழூழூழூழூழூழூழூ**

**கால்பந்து**

புபனேஸ்வரில் நடைபெறும் ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் சென்னை அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

**ழூழூழூழூழூழூழூழூ**

**கிரிக்கெட்**

வதோதராவில் நடைபெறும் மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில் இன்றிரவு மும்பை இண்டியன்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**